


ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# இராமாயண ஏலப்பாட்டு.

## காப்பு.

### வெண்பா.

அண்டர்துயர்தீர்த்த வண்ணலிராமாயணத்தைத்
தண்டமிழாலேலப்பாச் சாற்றுதற்குக்-கண்டவுடன்
ஆறிரண்டாழ்வார்க ளன்பாய்த்துணைசெய்யத்
தேதவருமென்வாய் தெளிந்து.

## அவையடக்கம்.

### கலித்துறை.

கொண்டால்வடிவுடைக் கோதண்டராமன்குணசரிதை
பண்டருமாமுனி வான்மீகர்பின்னும் பலகவிஞர்
கண்டதையானேலப் பாவாகச்செய்து களித்திந்த
மண்டலமீதிற் கருடன்முன்னீதற்கு மாட்டியதே.

## ஆதிகாவியம்.

பைரவிஇராகம்-ஆதிதாளசாப்பு.

பல்லவி.

ஏலேலோ-ஏலேலோ-தத்தையா
ஏலேலோ-ராமஜெயம்.

# இராமாயண ஏலப்பாட்டு.

## அநுபல்லவி.

ஆலிலைமேற்கண்வளரு மெங்கள்
  ஆண்டவனாதிகாவியங்கள்
கோலமிகும்ராமகதை நாயேன்
  கூறுமேலப்பாவியனுக்குச்
சீலமிகுமாழ்வார்கள் திருச்
  சேவடிகருணைசெய்யவே
வேலரக்கர்கொடுமையினால் உம்பர்
  மிகமெலிந்துகேசவனைப்
பாலாழியாவென்று பரவிப்பணிந்தார்
  பறவையேறிப்பரமனும்வாய்மலர்ந்தார்
சாலவுமயோத்திராசன் றவஞ்செய்தால்
  தசரதன்பிள்ளையாய்வருவதுமெய்தான்
கோலாகலத்துடன்காட்டிலேசென்று
  குரங்குபல்லூர்க்கங்களாவீர்களென்று
மூலமுரைசெய்யவும்பிரமாதிதேவர்
  மூலைக்குமூலைவந்தவதாரமாவர் என்று

காலந்தெரிந்தகுருமுனிகூறவுந்தான்
  கண்டதசரதன்வேள்விக்கிசைந்தான்
சிவன்கலைக்கோட்டுமுனிவர்முதலெல்லாம்
  சேர்ந்துவருவார்க்குச்சகங்களொருபுல்லாம்
பாலகவிஸ்ரீநிவாசன்பணிந்தேத்தும்
  பராபரன்றிருவடிக்கேயன்புசாத்தும்
வாலவிருத்தாதியர்களேறிவருகப்பல்
  மாநகரயோத்தியினில்வந்ததடாகப்பல்
தாலமுழுவித்துஞ்சம்பாரமுற்றுந்
  தாபதர்கண்வைத்துந்-தாஞ்சுதீட்சித்துஞ்
சாரி-யன்னம்பாரி-சொன்னமாரி-பெய்துபூரிப்புடன்

சற்றுங்குறையிற்றும்பய
சத்தின்மக முற்றும்பெற

ஏலேலோ ராமஜெயம்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# முதலாவது பாலகாண்டம்.

சரணங்கள்.

திருவளரும்அயோத்தியினில் வாழும்
தீரதசரதன்புத்திராய்
பரமன்வந்தோராமபிரான் தம்பி
பரதலட்சுமணசத்துருக்கனன்
கருவிநின்றேயவதரித்த பால
காண்டமதையுரைத்திடுவேன்
குருமுனியாம்விசுவாமித்திரன் வந்து
கொண்டராமலட்சுமணர்
வருவழியிலேபசியிளைப்பெல்லாநீங்க
மந்திரங்களெல்லாமதிபலைகளோங்கக்
கருமேகமென்னவேவிசையாய்நடந்து
காணுமூன்றுடைகைசுபாகுமடர்ந்து
ஒளிவாளிபட்டவர்விண்ணுலகராக
உடன்வந்தமாரீசர்கயலுண்டுபோகப்
பெரிதானவையகத்தையங்குநிறைவேற்றிப்
பண்ணுமங்குள்ளதாம்வெகுதீர்த்தமேத்திப்
பரமரிஷிகவுதமனிருக்குமிடமேவிப்
பதத்தூளினாலெழுந்தாள்கலிதேவி
பெருமையாயெல்லோருமிராகவனைநாடிப்
போரானமிதிலாபுரம்வந்துமேகூடி
அரிதானவில்லையுமெடுத்தேவளைத்து
அந்தநகரத்திலானந்தம்விளைத்து
வருவித்ததசரதன்முதலானபேர்கள்
வந்துதேவியருடன்மிதிலைசேர்ந்தார்கள்
விரைவாயுடன்சகலதேசத்திலுள்ள
தேவர்முதல்காவலரும்வந்துகளிகொள்ள
சாசரென்னவேபந்தன்மேற்கட்டிச்சொன்னத்
தாருடன்வாழைகமுகாஞ்சித்திரமின்னச்
சரியானவாத்தியங்கடல்போன்முழங்கத்
தாமுள்ளபேர்வேண்டவெல்லாம்வழங்க

ஒருமையாயங்குள்ளவர்க்கன்னதானம்
  உண்டுவருபூசுரர்க்கேசொன்னதானம்
தரவேவந்திட்டர்முதலோர்கூடிவந்து
  சடங்கானைஓமங்களெல்லாம்வளைத்து
திருவாணசீதைக்கலங்காரமிட்டார்
  சீராமனுந்தம்பியும்பிரித்திட்டார்
மரியாதையுடன்வந்துஜனகனுந்தான்தான்
  வைதேகியைக்கன்னிகாதானமீந்தான்
இரகுபதிசானகியொடுமணைவரையின்மேவி
  யியற்றினன்ஜாலமுதலெல்லாம்பாவி
அருமையாஞ்சீதையைராமன்பிடித்தான்
  ஆனகலியாணவிதியெல்லாமுடித்தான்
ஸ்ரீவானசீதாவிவாகநடத்தி
  வேண்டிவருதம்பியர்க்கும்மணநடத்தி
தெருவெங்குமுலவலம்வந்தார்கள்பின்னுஞ்
  சீதாபிராமனொடுதம்பிமாரொன்னும்
மருமகன்மகளென்றுவானந்தமாக
  மானுஞ்சககசாதனுமுன்போக
திருவுளமகிழ்ந்தேசிறப்பாயபொருந்துஞ்
  சீதைமணவாளனுந்தம்பியுமிருந்தும்
கருணைபெறவேவந்தவர்க்குபசரித்துக்
  கண்டவுடனேஜனகனுத்திரவுபெற்றுப்
பருவங்கவங்காதிதேசாதிதேசர்
  பயணம்புறப்பட்டுராஜாதிராசர்
இரதகசதுரகம்பதாதிசதுரங்கி
  ஏகமாம்படைகடல்போலவேபொங்கி
வருமந்தவேளையிற்பரசுராமன்தான்
  வருவதைக்கண்டரசனும்பயமிருந்தான்
சிரஞ்சீவியாம்பரசுராமனெதிர்வந்து
  சீராமனுடன்வந்துசெய்யவுமுனிந்து
ஒருகணைகொடுத்தவற்குள்ளதவமெல்லாம்
  உடனபிசமுங்கொண்டதவர்தந்தவில்லாம
பெருகியேயானந்தமேற்கொண்டுதுள்ளப்
  பின்பரதனுஞ்சேனையுங்கவலைதள்ளத்
திருமணாளன்றம்பிமூவருங்கூடச்

சேர்ந்துவரவும்பர்மலர்பெய்துகொண்டாட
மருவியேவாத்தியவொலியண்டமேற்றுங்க
வந்தபரதன்கேசயத்தேசமேவப்
பரிவாகவேசக்திராஙீதாண்டிவர்தான்
பாலகவியாஞ்சீனிவாசனையுகந்தான்
இராமாச்சுமந்திரன்சுக்கான்றிருப்பத்
திருவயோத்தியில்வந்துசேர்ந்துதடாகப்பல்
திருவாழுமாரன் ஜெயதேகவீரன்
கெதிசாரசோரன் திவ்வியாவதாரன்
சீலன்-அநுகூலன்-தடபாலன்-ஆதிமூலன்-ஒதிச்

சிந்தித்தவர்-தங்கட்கரு
ளன்புற்றவை குந்தத்தனே

ஏலேலோ-ராமஜெயம்,

பாலகாண்டம்-முற்றிற்று.

இரண்டாவது.

# அயோத்தியாகாண்டம்.

முத்தமொல்லாங்கொண்டாடு மாதி
மூர்த்திவனம்போனசெய்தி
சித்திபெறுமயோத்தியாகாண்டம் ராமன்
திருமுடிக்கேயபிஷேகம்
உற்றதுபோய்க்கூனிசொல்ல அந்த
ஒண்டொடியாளாங்கைகேசி
மெத்தவெகுமானஞ்செய்து நல்ல
மின்னிடையாள்களித்திருந்தாள்
குத்திரஞ்செய்வினைந்தேபின்புகூனி
குறுகுறுத்தெழிலெடுத்தாளேயவதாணி
உத்தமாவன்னங்கள்பாலுண்டநீசை
யொன்றிரண்டாக்குதல்போலுமெங்காளை
சித்திரவிசித்திரமப்பழமொழிதொடுத்துச்
செப்பினமந்தரைமென்னசொல்லுரேவனெடுத்துக்
கற்றவஞ்சனையாக்கலைப்பார்கலைத்தாள்
கல்லுங்கரைந்துபோமென்றேசலித்தாள்
மற்றவளைச்சொல்லியேமனதையுருக்கி
வசிட்டபாத்திமுன்வரமெக்குதுக்கிச்

சற்றுமில்லாமல்வெளியேயினுன்வந்த
    தசரதன்மேற்கோபமதுகொண்டிருந்த
பத்தினிகைகேசியையெடுத்தெனதுமானே
    பைங்கிளியேயன்னமேமயிலேசெந்தேனே
இத்தனைவிதந்துயரமேதெனவெழுந்தான்
    இராமன்முடிபரதனுக்கென்றேமொழிந்தான்
பத்துமோர்நாலாண்டுகாட்டினில்விரும்பிப்
    பலதவஞ்செய்யவென்றுளோதி நம்பி
அக்கதியில்தசரதனைபுழுவாய்த்துடித்தானை
    அப்போதுமன்னையாளை வேண்டிப்படித்தான்
எத்தனைவிதப்படித்தானுமவதெல்லாம்
    எண்ணுமல்நின்றுளவள்மனதுகல்லாம்
கர்த்தனையழைந்தேவிருள்கைகைமாது
    கானகஞ்செலக்கண்டிராசனைப்போது
புத்திரசோகத்தில்விண்போயினதுமெய்தான்
    பொய்யாதுபரதன்வந்துற்றுரிமைசெய்தான்
பெற்றதாயைக்கண்டுமிகவும்பதைத்தான்
    பின்கூனியைதம்பியைவேயுதைத்தான்
சுத்தராமன்னைமார்குருமந்திரிமாருஞ்
    சூழ்ந்தவர்தேயவ்வயோத்தியுள்ளோரும்
அத்திசையிலேராமனைநினையா
    எல்லோருமவ்விடம்போகவுரைசெய்ய
மற்றவருடன்றம்பிபரதன்பாலே
    வந்தவனிராகவனைசென்றவழிமேலே
மத்தியில்வந்துகுகனுற்கங்கைதாண்டி
    மகரிஷிபரத்துவாசமுனிதன்னைவேண்டி
சித்திரகூடத்திலேராமனைக்கண்டு
    தெசரதன்சேதியுரைசெய்யவுட்கொண்டு
மெத்தநொந்தேதந்தைக்கடனைக்கழித்தான்
    வேண்டவேதன்பாதுகைக்தொழித்தான்
பத்தியாய்ப்பரதன்றுதிக்கவிடைதந்தான்
    பாலகவியாஞ்சீனிவாசனுயுகந்தான்
மற்றுமிகப்புவியிலக்கணந்தானே
    வகையொன்றமிழ்க்கதையெடுத்துரைசெய்வேனே
இத்தனையப்பிரதாபராமாயணந்தா
    னென்பதோர்கள் பலுகப்பலுக்குந்தான்
ஒத்தராகச்சிந்தையென்பாட்டு

உடனிலக்குமனென்றபாய்விரித்திட்டு
குற்றமில்லாதையன்மீகாமனோட்டுங்
கூறுமவர்க்கென்றநங்கூரநாட்டுந்
தத்தென்றவிதியாந்துடுப்பங்கேசாத்தித்
தன்னறந்தவமாஞ்சரக்கச்சேயேற்றிச்
சுற்றராக்கர்களென்னுமகாமீன்கட்குந்
துற்றிடக்கோதண்டவாளியிரையொக்கும்
மித்திகையெனும்பூமியென்றகடல்மீது
விட்டார்களிக்கப்பலோடவப்போது
சிற்றம்மைகைகேசியாங்காற்றினாலே
தெசரதன்றந்தவுரையென்றவழிமேலே
சித்திரமக்கூனியெனுஞ்சுக்கானையிட்டுக்
கிளம்பியதிவேகமாகப்புறப்பட்டுச்
சித்திரவயோத்திவிட்டேகங்கைதாண்டிச்
சென்றேபாரத்துவாசமுனிதன்னைவேண்டிச்
சித்தமுடனேதம்பிமுன்வழிமிதிப்பச்
சித்திரக்கூடந்தாண்டிச்செல்லுதடாகப்பல்

பத்திமானுகம்-பணிசெய்விவேகம்
பாதுகாயோகம்-பட்டாபிஷேகம்
பண்ணி-பதன்கண்ணி-யம்பவெண்ணி- யர்தப்புண்ணியனும்

பாதன்றய-விரதன்கரி
வாதன்கிருபை-புரைதந்தவன்

ஏலேலோராமஜெயம்.

அயோத்தியாகாண்டம்-முற்றிற்று.

---

# மூன்றாவது ஆரணியகாண்டம்.

அண்டமெல்லாம்நிறைந்திருக்கு மெங்கள்
ஆதிமூலன்வசித்திருந்த
தெண்டகாரணியகாண்ட மாகச்
சித்திரகூடத்தைவிட்டுக்

கண்டமுனியத்திரியையு மூயர்
கற்பமிகுமனுசூயையுங்
தண்டனிட்டேயாசிகொண்டு அந்த
தாசரதிவனம்புகுந்தார்
கண்டகவிராதனைச்சாடியப்பாலே
காணுமச்சரபங்கனுக்கருளிமேலே
தண்டகாவனத்துமுனிவர்க்கபயமுந்தான்
தந்தேசுதீஷ்ணமுனியுங்கண்டுவந்தான்
அண்டிதந்தேபொதிகைமலைதன்னைநாடி
அகத்தியர்தருந்தெய்வவாயுதமுங்கூடி
எண்டிசைகளுமபரவுபஞ்சவடிதீரம்
ஏகியும்வசித்திருந்தார்களந்நேரம்
கொண்டல்வண்ணனையங்குமையலொடுகண்டாள்
குடிகேடிசூர்ப்பநகிதிருவுருக்கொண்டாள்
விண்டுவெட்கத்தையுமிராமனிடம்வந்தாள்
வேடிக்கையாய்ச்சரவணகபலமொழிந்தாள்
வண்டவுரையேன்செய்கிறாய்போடிபோடி
மனையாளிலாதவென்றம்பியைக்கூடிக்
கொண்டுவாவென்றந்தராமனுங்கூறக்
கூசாமலேவந்துவானந்தமீற
அண்டையில்வந்திடுமரக்கியைத்தம்பி
அய்யனுரைகொண்டுவந்தாயென்னைநம்பித்
தொண்டனுமென்னிடம்வந்தாயேயாணி
சோதித்தராகவனிடந்தானேபோநீ
மீண்டுதான்செய்வதேதென்னவவள்சூது
விரைக்குழற்சீதையைப்பாயவரும்போது
மண்டிசினமோடிலக்குமணுந்தெரிந்தான்
வாட்கொண்டுமவள்காதுமூக்கையுமரிந்தான்
சண்டையிடவந்தார்கள்கரதூஷணாதி
சங்கமாயிரதகசதுரகமபதாதி
சண்டனைக்கண்டிடவனுப்பினார்மேலே
தங்கைசொற்கொண்டிராவணனுமப்பாலே
பெண்டென்றசேதியைக்கேட்டுமயல்கொண்டான்
பின்புமாரீசனுமானைமுன்விண்டான்
துண்டரீகனுமந்தமாரீசன்மானாய்த்
தோற்றவேகண்டவுடனேமையலுற்றாய்ச்

சண்டப்பிரசண்டகோதண்டதானுக்குச்
　　சாற்றினுளம்மையுடனண்டபரனுக்குத்
தண்டமுண்டென்றதன்றம்பிலங்காக்
　　தாசரதிவில்லம்புகொண்டுவெளியேறக்
கண்டமானைத்தொடர்ந்தய்யவனம்மேவக்
　　கண்டித்துவிழாக்கனுமங்கேகூவ
விண்டகுரல்கேட்டம்மைசாமிகுரலென்றே
　　மிகநொந்துபிள்ளையோளையேவினுளன்றே
ஒண்டியாய்ச்சானகியிருப்பதையுநோக்கி
　　யுடனந்தராவணன்றேரிலேதூக்கிக்
கொண்டுசென்றானேசடாயுவைகுத்திக்
　　குறித்துவருதம்பியுமுரைத்தான்றிருத்தி
மண்டுவிசனத்தோடிராமனுங்கூடி
　　வந்துபார்த்தேயந்தவனமெலாந்தேடிக்
கண்டவுடனந்தச்சடாயுவுந்தானே
　　காரணஞ்சொல்லிநற்கதிபோயினானே
தன்றகப்பன்போற்சடாயுவுக்குள்ள
　　சகலவிதியுங்கழித்தேமெள்ளமெள்ள
அண்டிவருபோதோரரக்கியெதிர்வந்தாள்
　　அவள்யோமுகிதம்பியாண்மூக்கறுத்தான்
தண்டகாவனத்தில்வருகின்றபோதங்கே
　　கூடுகியோர்மலைவளைக்தேவருகுதங்கே
உண்டிதைக்கண்டையோவென்னக்கபந்தம்
　　உங்களைவிடேனென்னசெய்வதுகபந்தம்
கொண்டதெனராமனுங்கம்பியுமெழுந்தே
　　கூர்வாளினால்வெட்டவுங்கைவிழுந்தே
விண்டலத்தேதிவ்யவடிவாம்விமானம்
　　மேற்கொண்டுசெய்துதிக்குண்டோசமானம்
பண்டொருபக்தனையுமென்றகதிதந்தான்
　　பாலகவியாஞ்சீநிவாசனையுகந்தான்
உண்டகனிதந்தசபரிக்கருள்கொழிப்ப
　　உயர்ந்தபம்பையிலோடிவந்துதடாகப்புல்
　　　　வண்டுகள்பாடும் மலர்கொண்டுழும
　　　　வாசக்கனிடும் மதுவெஞ்சுமோடும்
　　மாலைத்தருஞ் சோலையதின் பாலையிகுந் தாலைத்தளிர்

வாசன்கரி-ராஜன்பவ
மோசன்திரு-நேசன்பரன்

ஏலேலோ-ராமஜெயம்

ஆரணியகாண்டம்-முற்றிற்று.

---

# நான்காவது கிஷ்கிந்தாகாண்டம்.

---

அம்பரமபதநாட்டில் வாழும்
அச்சுதனும்ராமனங்கே
பம்பைநதிக்கரையிருந்து அய்யன்
பரிந்தகிட்கிந்தாகாண்டம்
வம்பவிழுஞ்சோலையிலே வந்த
மாருதிசொல்லறிந்துகொண்டு
கம்பிதமாஞ்சுக்ரீவற்கு எங்கள்
காகுத்தனபயந்தந்தார்
நம்பியுனைவஞ்சிக்கும்வாலியையடிப்பன்
சரணம்புகுந்துவருமுன்குறைமுடிப்பன்
தப்பென்றுசொல்லியுடனங்கேயிருந்து
கடந்தானேதுந்துபியெலும்பையுமெறிந்து
உம்பர்பதிதொட்டமரமேழும்தொளைத்து
உடனங்கெறியச்சிநேகம்விளைத்து
மின்பணிகளெல்லாங்கொணர்ந்துகவிராசன்
வேளையதிலொன்றுசொல்வானந்தநேசன்
அம்பரந்தனிலிருந்தோர்மாதெறிந்த
தரணமிவையென்றுசொலவேயறிந்த
எம்பிரான்கண்டுதுயர்கொண்டுமதிவிண்டு
ஏங்கினனென்செய்வேனென்றுமேனபண்டு
தாம்பிசுக்கிரீபன்முதலோர்கள்பணிந்தே
ஜானகிதனைத்தருவமென்னத்துணிந்தே
செம்பதுமமென்றமுகமண்டலமலர்ந்து
செழிக்கவுடன்சுக்ரீவனிகைகலந்து
நின்பிராதாவுடன்சண்டைசெய்யென்று
நியமிக்கவாலியைக்கூவியேநின்று

வம்புகள்விளைத்தங்கேமல்யுத்தந்தான்
மாட்டவேசுக்ரீவன்மலையேறிவந்தான்
பின்பலன்கொள்ளவோரடையாளமிட்டுப்
பேசவேசுக்ரீவனும்புறப்பட்டுத்
தம்பிபோலார்ப்பரித்துச்சண்டையிட்டான்
சுவாமிபக்கேமறைந்தோரம்புவிட்டான்
முன்படிக்கேசண்டைசெய்வாலிமீது
முடுகிவந்தோர்கணைவிழுந்தநின்றது
முன்புவருராமனைக்கண்டுமனநொந்தான்
மோசமிதுசெய்தாயேயென்றுவசைதந்தான்
பின்புமாஞானம்பிறந்தேதுதித்தான்
பேசவரிதானவைகுந்தங்குதித்தான்
சம்பிரமதாய்ச்சுக்கிரீவனபிஷேகம்
தம்பியைக்கொண்டுசெய்வித்ததும்மோகம்
அன்புடன்சுக்கிரீவனய்யனுரையாலே
யடைந்தானேகிட்கிந்தையதிகாரமேலே
தன்பெருமைகொண்டாடுசுக்ரீவனுந்தான்
தவணைதாண்டினனென்னவையன்சினந்தான்
துன்பமெவனதறியலேசுக்ரீவனென்றே
சுருக்காயிலக்குமாவனழைபவனையின்றே
என்பதைக்கேட்டுடன்கிட்கிந்தைநாடி
இளையோன்சினந்துசுக்ரீவனைத்தேடித்
தென்புடனிருந்தய்யனிட்டவுரைதாண்டிச்
செய்தவஞ்சகமென்னசொல்லென்னவேண்டிக்
கும்பலாய்வருசேனையிப்போதயாரும்
கோபத்தைமாற்றீரென்றனைக்காருமென்று
கன்பனுஞ்சுக்ரீவனிக்கமொழிகூற
ஈதனிடம்வினைமீயாவரும்வந்துமகிழ்ந்தேற
நம்பிவருநீலனெடுகுமுதகுமுதாக்கன்
கடுஞ்சுஷேணனாதிபவன்சுயாக்கன்
அன்பாகசனிடபன்மயிந்தனறுமித்தன்
ஆனைசதவலிநான்கேசரிவசந்தன்
அன்புடன்சாம்பவனுமான்றனிருமுகன்தான்
அங்கதன்றானெழுபதுவெள்ளமுந்தான்

அம்புதிபுரண்டதைப்போற்கவிச்சேனை
யானதுகணுஅதிசம்பிரிவுதானே
இன்பமுடனேவெண்கருப்புச்சிவப்பு
இன்மனதிவண்ணங்கள்காடிசன்வகுப்பு
அம்புவிநிறைந்தங்கேகர்ச்சனைகளிட்டும்
அன்றிலணிகொண்டுயங்கேதுணிந்திட்டும்
நம்பிவருஞ்சேனையிக்கப்பல்மீதேறி
நாடிவந்தாராமஜெயமென்றுகூறி
பம்பலைக்கண்டய்யனுள்ளம்மகிழ்ந்தான்
பாலகவியாஞ்சினிவாசனையுகந்தான்
வம்பிலேயெனச்சாமிமூன்றுதிகைழப்ப
மதங்கமாமுனிமலையில்வந்துதடாகப்பல்
செம்பதுமமொக்கும் திருவடிவிளக்கும்
ஜெகமெங்குமெய்க்கும்-ஸ்ரீராமனுக்கும்
சிந்தை-மிகநொந்தை-பிதுவிந்தைமொழி பெந்தைஎந்தையெனச்
செப்பித்துய-ரைப்பித்திட
ஒப்புக்கொளும்-விப்பிரப்பிரியம்

ஏலேலோ ராமஜெயம்

கிஷ்கிந்தாகாண்டம்-முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

# ஐந்தாவதுசுந்தரகாண்டம்.

அந்தமில்லாப்பரம்பொருளாம் ராமன்
அடியனுமான்விஜயமிது
சுந்தரமாங்காண்டமிதை காமேன்
சொல்லுவதுகப்பலாகக்

சிந்தையதுமானிடத்திற் சாமி
திருவாளிகொடுக்கவந்தான்
வந்துசுயம்பிரபையைக்கண்டு அந்த
மாருதியம்மயேந்திரஞ்சென்றான்
முந்தவேசம்பாதியுரைசொல்லடலாபம்
முதிர்சாம்பனுமெடுத்தான்விசுவரூபம்
தந்திபுலிசிங்கம்நிறைந்தமலைநின்று
தாவிவந்தேசுரசைமுதலோரைவென்று
வந்தமைத்தநாயகியைவாழ்த்திவிடைதந்தான்
வாரிதிகடந்திலங்காபுரம்வந்தான்
அந்திநேரத்திலன்னகர்புகுஞ்சூது
அறிந்தாரடாவென்றதட்டவப்போது
முந்தியிலக்கணிதனெற்றியிலடித்தான்
முடங்கியுதிரங்கக்கிவீழ்ந்தேதுடித்தாள்
மந்திரியனுமந்தனுமிலங்கையுள்வோடி
வந்திரவிலெங்கெங்குமேசுற்றிநாடித்
தொந்தமுள்ளராக்கதர்களுப்பரிகைமேடை
தோன்றுமணிமாடங்கள்வீதிமடைரோடை
இந்திரசித்தன்விடணன்கும்பகர்ணன்
இன்னமதிகாயனட்சன்செய்புமன்னன்
மந்திரிகள்சூழுமனையெங்கெங்குநாடி
மாநகரமெழுநூறுயோசனைகடேடிப்
பித்தியுமாக்கமலன்மேடாதரினைமேவிப்
பிரபலமாய்ச்சுசித்திரைசெய்யுமனைதாவிப்
பைங்கொடியொருத்தியைக்கண்டமார்மாதோ
பண்ணுகர்க்கிருவர்மாதோவித்தோ
அந்தமகிஷிதானோவென்றுமருள்கொண்டு
அதைவிட்டசோகவனமெனதிற்கண்டு
செந்திருவுமின்றிலையிலையென்றே
சீதையைத்தரிசனஞ்செய்துபுன்னின்றே
பந்தியாயிரகவனிலக்கணமெடுத்தான்
பணிக்கம்மைகையின்மோதிரமுங்கொடுத்தான்
தந்தசூடாமணியைவாங்கியேவந்து
தானவ்வசோகவனமெங்கும்படர்ந்து
குந்தமுவலாதியவிருக்கங்களினை
கொடிசெடிகளுனுனிதன்னினைபின்னைக்

வந்தவிங்காரெண்பதாயிரம்பேர்கள்
மடியவந்தார்செம்புமாலிமுதலோர்கள்
அதமாம்பஞ்சசேனாதிபர்திரண்டு
அதிவீரரெழுமந்திரிகுமாரர்மிண்டு
ஒந்திடக்கண்டவுடனட்சயனெழுந்தான்
சேனையுடன்வந்துசரமாரிகள்பொழிந்தான்
உந்தியவனைக்கரைத்தோர்திலகமிட்டே
உடன்வந்தராவணிவிடுத்தகணைபட்டே
தந்தைலங்கேசன்மின்னிடவலன்மேல்
தன்வால்வளர்ந்திருந்தானைமன்போலே
இந்தவூர்வந்தநீயாரடாங்கல்லு
ஏதுவயணங்குரங்கேநீசொல்லுசொல்லு
எந்தனுக்கெனவெங்கள்ராகவன்றேவி
எந்தாயினைத்திருவடிவந்தாயேபாவி
உந்தனைபிடிக்கவோவென்றய்யன்பிள்ள
உடனந்தராவணன்றன்சினங்கொள்ளச்
சொந்தவீடணங்குசொன்னமொழிகொண்டு
துணிசுற்றிவாலிலேதீயிடப்பண்டு
அந்தவகைகேட்டம்மைபோற்றிசெயவுந்தான்
அக்கினியுமலர்போலிருந்ததையறிந்தான்
விந்தைலங்காநகரமெங்குங்கொளுத்தி
விசுவரூபங்கொண்டுதேகம்வளர்த்தி
வந்துகடறாண்டியமயேந்திரமலைமேலே
வானரங்களையெலாங்கண்டுமுன்போலே
சந்தோஷமாய்மறுவனத்திற்குதித்துத்
தண்டாவுகாணய்யன்முன்பேய்க்குதித்து
முந்துகண்டேன்சீதையைத்தான்சுகந்தான்
மொய்த்தசூடாமணியுகந்துகாதுவந்தான்
பந்தவனுமன்தனையுமய்யன்மகிழ்ந்தான்
பாலகவியாஞ்ஸ்ரீனிவாசனையுகந்தான்
சிந்தைதெளிக்கவிச்சேனைகள்களிப்பத்
தென்கடற்றுறைவந்துசேர்ந்ததடாகப்பல்

வந்தணிவகுத்து-மயிந்தனைமுன்னவைத்து
வாசனையொத்து-மாதிகொந்தளித்து

வாசஞ்செய்சந்தோஷங்கொண்டு-சேதுசம்பெறுமாசங்கத்தின்

வந்திப்புடைந்தத்துவை
குந்தங்களிசைந்திப்படி
ஏலேலோராமஜெயம்

சுந்தரகாண்டம்-முற்றிற்று.

---

ஸ்ரீராமஜெயம்.

# ஆறாவது உயுத்தகாண்டம்.

அங்கமெல்லாங்கமலமொக்கும் எங்கள்
ஆதித்தகுலநாதன்
தென்கடலின்றுறையிலிருந்து கவிச்
சேனைசெய்யுமுயுத்தகாண்டம்
மங்குலிலேமறைந்தரக்கர் முன்போல
வந்திலங்காபுரிநுழைந்தார்
லங்கைமன்னன்யோசனையில் நல்ல
நெறியுரைக்கும்விடணனை
எங்குலத்துரோகியென்றுனில்லாதே
என்றவண்ணனைஎதிர்த்தொன்றுசொல்லாதே
அங்கவனைவிட்டுப்பிரிந்துகடல்தாண்டி
அய்யன்வசிக்கின்றவிடம்வந்துவேண்டிச்
சிங்காரகுமாரனின்சரணமெனவந்தான்
சீராமனுக்கருணைசெய்துகைதந்தான்
எங்களய்யன்பின்புவருணனையடுத்து
எண்ணாதவன்மேலனற்கணைவிடுத்துத்
தங்கமணிமாலைகொண்டபயங்கொடுத்தான்
சாமிநளனைக்கொண்டுதிருவணைதொடுத்தான்
துங்கமான்சுவேலமலைமேலேயிருந்தான்
சுகசாரணர்வந்துபோனதுதெரிந்தான்
மங்கவில்சுக்ரீவனிருதனைமறித்தான்
மல்லுயுத்தஞ்செய்துமகுடம்பறித்தான்

இங்கிலங்காநகரவாசலின்பாலே
யிட்டபடையைக்கவிவளைந்ததன்மேலே
அங்கதன்றூதுபோயிராவணன்றன்னை
அம்மாமையைவிடுத்திடில்லாவிடிலோவுன்னை
அங்கம்பிளந்திட இடிப்பனிதுமெய்தான்
அதுகண்டரக்கன்சினந்தவுரைசெய்தான்
இங்கார்கவொட்டவரைவிசிறுராங்கே
கிளம்பியங்கதன்வந்துரைத்தானேயிங்கே
அங்கதைக்கண்டிருவர்படையுமென்மேலே
அண்டிவந்தேசண்டைசெய்ததக்காலே
எங்குமிறைராக்கதர்கள்கரிபரிகள்கூட
எறியிட்டிவிற்கத்திதடிகொண்டுசாடச்
சங்கிராமம்வானரர்களுடனேயறிந்தார்
தாங்களுஞ்சிலைமலைகண்மரம்விட்டெறிந்தார்
இக்கிருவருஞ்சண்டைசெய்ததிகோரம்
இருபடைகளுஞ்சென்றுபோனவைபாரம்
பொக்கிப்போராவணன்றேர்கொண்டுசேர்ந்தான்
போரிலநுமான்குத்தவிறிட்டுவீழ்ந்தான்
அங்கெழுந்தேவேல்விடத்தம்பிநொந் ான்
அசையாதவிளையோனையநுமான்கொணர்ந்தான்
எங்கடாவெனச்சறிராமன்மேற்சென்றான்
எல்லாமிழந்தொன்றியாகியேநின்றான்
பங்கமாறுயினிச்சீதையைத்தாடா
பாரினிச்சண்டையென்றாறுளேவாடாவென்று
தங்கருணைசெய்ராமனுணர்கொண்டுதாவித்
தந்தம்பிக்கும்பகன்னனையழைத்தேதவி
நங்கமதுவிண்டிடுமிராவணன்றன்னை
நாடியத்தம்பியுமுணர்ப்பானேபின்னை
செங்கனலைவாரிமடிதன்னிலேகட்டுஞ்
செய்தியிப்போதுவிச்சீதையான்முடடும்
தங்கிவந்தேயாட்டைமாட்டைக்கடிக்கத்
தானதன்மேலுமானிடனைப்பிடிக்க
வுங்கருதுவதுபோன்மிகுந்தசிறைகொண்டாய்
விதிமுடிந்தேசீதையென்றவிடமுண்டாய்
யிங்ஙனங்கண்டநீயினியென்னசெய்வாய்

வீடணன்சொற்புத்திவிட்டெடங்கேயுய்வான்
என்கின்றதைக்கண்டாக்கல்வெகுண்டு
ஏதென்றதான்படபடத்துக்கண்டு
என்காத்தாலடிப்பேனென்றுகூறி
எதிரிடுங்கும்பகன்றுணையையன்சீறி
புங்கமாய்க்கணைவிடுத்திவர்சண்டையாலே
புரண்டுதையாரத்தவெள்ளமென்மேலே
சங்கையின்றிக்கும்பகனனமராடத்
தான்கண்டதுண்டமாகச்செய்துபோட
ஒண்கணைதொடுத்தானேயிரவிகுலமன்னன்
உடனேபதைத்துவீழ்ந்தான்கும்பகன்னன்
துங்கனதிகாயன்மகராட்சன்முதலோர்கள்
சூழ்ந்துவைக்கையன்பால்விருந்தார்கள்
இங்கிதைக்கண்டிந்திரசித்தனுங்கைத்தான்
ஏதடாவென்றுதன்மூக்கில்விரல்வைத்தான்
பின்கடுங்கோபமாய்வெகுசேனைசுற்றிப்
புறப்பட்டதென்கற்றமாயைப்பற்றி
ரங்கமதிலேவந்துசரமாரிதூற்றி
நின்றதைக்கண்டுராமானுஜன்சீறச்
செங்காத்காலம்புவிட்டமர்தொடுத்தான்
தீயனிரவின்றுநாகபாசம்விடுத்தானே
எங்கருடனும்வந்துவேதனைகளைந்தான்
எல்லோருமெழுமுன்னமிளையோனெழுந்திருந்தான்
இங்காரெனும்பூதபதிமொதிர்த்தார்
தேசத்திலுற்செய்யமினிவழிமிதித்தார்
கங்குலில்வந்துபிரமாஸ்திரமவீசிக்
கட்டினனிந்திரசித்தென்னும்விநாசி
அங்கதைக்கண்டுசாம்பன்கூறவுந்தான்
அநுமந்தன்சஞ்சீவிமலைகொண்டுவந்தான்
கங்குகங்காய்க்கீழ்விழுந்தவெகுவெள்ளைக்
கவிகளிலேயோடனெழுந்தனைமெல்ல
வெங்கணனிந்திரசித்தன்மாயாசீதை
வெட்டவுங்கண்டனுமகதனைப்போதே
மங்கியலறிச்சாமிமுன்னிலறிவித்தான்
மயங்கினனய்யனைகொடுத்தவிடைபெற்றுன
லங்கையுள்ளென்றுமைவி . . தைதண்டான்
நிகும்பலயாகமெனாதுபதிவெகு . . டான்

தன்கணைகொடுத்தேவவந்தவிளையோனுந்
  தாங்கும்பலேயிந்திரசித்தனென்பானும்
அங்கைகொணடேயத்திரத்திரங்கள்விட்டு
  அமர்செய்யவிந்திரசித்தன்மாயைவிட்டு
மங்குலின்மறைந்திடத்தம்பிகணைதொட்டான்
  மாபாவியிந்திரசித்தனடிபட்டான்
தன்குமாரனும்போனதைக்கண்டுநொந்தான்
  சதுரங்கமானவெகுசேனைவிடவுந்தான்
பொங்குகடல்போலவேமூலபலம்வந்து
  பொருதவய்யன்மோகனாத்திரம்விழுந்து
அங்குவெகுராமனாய்த்தோற்றியவருள்ளம்
  அவர்க்கலாடித்துவிழ்ந்ததிகோடி
இங்கிதைதக்கண்டனிலங்கேசன்வெற்றி
  இரதமேற்கொண்டுவெகுசேனைகள்சுற்றித்
திங்களுதயம்போலமாதலிகொணர்ந்த
  தேரேறிவருராமனைக்கண்டுமூந்த
புங்கானுபுங்கமாய்ச்சரமாரிவிட்டுப்
  போரிடச்சாமிபிரமாத்திரம்பட்டு
அங்கொருமலைக்குநிகராகமண்மேலே
  அந்தராவணன்விழுந்தான்கொடுமையாலே
விண்கலந்தேயண்டர்பூமாரிபெய்ய
  விடணன்சென்றறக்கன்கடன்செய்ய
வற்கண்ணவிபீஷணற்கய்யனருள்யோகம்
  மன்னனிளையோன்செய்துவைத்ததபிஷேகம்
மங்கையாஞ்சனகியைராமனைழையெனறான்
  மாருதிமகிழ்ந்தோடிவாவேணுமென்றான்
கங்கைஜானகியுடன்சாமியிடம்வந்தாள்
  காதனெண்ணங்கண்டுதீயிற்புகுந்தாள்
அங்கியுமுடன்வெருவியம்மையையெடுத்தான்
  ஆருமிணையிலையென்றுசாமிமுன்விடுத்தான்
அங்கயனரன்றேவராருந்துதித்தார்
  அய்யனைத்தசரதன்செய்யுதவிபெற்றார்
மக்களமதாய்ச்சீதையைக்கொண்டுதேறி
  வானரருடன்புட்பகத்தின்மேலேறித்
துங்கநகர்கண்டுதிருவணைதன்னையேத்திச்
  சொல்லிவரவேயெங்களம்மைசெவிசாற்றி

அங்கிருந்தேவர் துகிட்கிந்தைகாடி
   அங்கவானரமந்தரிவருங்கூடிப்
பைங்கடர்மலைந்திகடாண்டியேவந்தான்
   பாலகவியாஞ்சீனிவாசனையுகந்தான்
நன்குருவெனும்பரத்துவாசன்களிப்ப
   நாடியவனாச்சிரமகின்னுடாகப்பல்
      அங்கமுனிகூடி-ஆதித்தநீடி
      அருமைகொண்டாடி அநுமானைகாடி
அன்பாற்பரதன்பாற்சென்றுமுனபால்ராமனும்பாரென்று
      அண்டிச்சொல்-விண்டிட்டவர்
      பண்டிப்புவி-உண்டிட்டவர்

ஏலேலோராமஜெயம்.

உயுத்தகாண்டம்—முற்றிற்று

---

ஸ்ரீராமஜெயம்.

# ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம்.

---

தேசமெல்லாந்துதித்திறைஞ்சு யிராமன்
   சீர்பட்டாபிஷேகமிது
ஆசிகொண்டுபரத்துவாசன் திரு
   வடிவணங்கிச்சேனையுடன்
மாசகலுங்குகனைக்கண்டு சாயி
   மகிழ்ந்துநந்திக்கிராமஞ்சென்றார்
நேசமுள்ளபரதன்றம்பி தாய்மார்
   நெடுகோர்துதித்துநின்றார்
தாசனும்பரதனைவிராகவனைவேண்டிச்
   சடைசோதனஞ்செய்தயோத்திலேதாண்டி

வாசவன்பதிபோலலங்காரமின்னம்
வாழைகமுகாம்பந்தன்மேற்கட்டிசொன்னம்
தூசுடன்பழவகைகளைதேகக்கன்கட்டித்
தென்னைகரியோத்திமலைதோறுமிதில்செட்டி
வாசமாஞ்சந்தனந்தூபதீபங்கள்
வருஷிக்கமலர்மாரிநானுவிதங்கள்
ஓசைகடல்போல்மேளதாளங்கணீடி
உடனம்பரத்திலும்பர்கள்வந்துகூடி
வாசிக்கும்வீணையொடுதுந்துமியடிக்க
வந்தரம்பைமுதலானோர்நடிக்கத்
தேசமைம்பத்தாறிலேநான்குவன்னஞ்
செனங்களிபுடாயமானங்களாமின்னம்
காசினியிலுண்டானதீர்த்தமொருமிக்கக்
கடலுள்ளதீர்த்தங்கள்கவிகொண்டுவைக்கப்
போசனங்கள்செய்துவைத்தார்கள்பூரி
பூசுரர்க்குச்சொரிந்தார்சொன்னமாரி
தாசிகள்நடத்திடத்தேரொன்றிலேறித்
தாசரதிவாராமஜயமென்றுகூறி
ராசர்கள்சேனைசூழப்பவனிவந்தான்
ராகவன்பாதனைசெய்மண்டபமிருந்தான்
பூசுரரனேகராய்க்கூடிவந்தங்கே
புரோகிதர்வசிட்டர்முதலோர்செயகடங்கே
பீசுரமதாவக்கினிவளர்த்தோமம்
வேண்டியதுசெய்ததிலளித்ததிஹோமம்
ஆசையொடுராமனைச்சிங்காசனத்தில்
அன்னைசானகியுடன்வைத்தார்களத்தில்
[illegible]சவையனிந்திரன்முதலோர்களிக்க
எண்டிக்கரும்பணிகள்கொண்டங்களிக்கச்
சேஷனுங்கம்பியுஞ்சாமரம்வீசச்
சேர்ந்துபரதன்குடைபிடித்தங்கேபேசக்
கூசலாய்மந்திரிகள்வந்தெச்சரிக்க
கொண்டாடியனுமந்தாள்பிடிக்கப்
பூசையாய்த்தீர்த்தங்கள்கொண்டுமுனிபெய்தான்
புவிராமபட்டாபிஷேகமதுசெய்தான்
கேசவனையயனலங்காரஞ்செய்வித்தானெ

கிரீடந்தனைதாரமன்சிரத்திற்பதித்தான்
கோசலேந்திராவென்றுகூவித்துதித்தார்
கும்பிட்டிறைஞ்சியெல்லோருக்கதித்தார்
ஏசறுமயோத்திமங்களவாத்தியவோசை
யெண்டிக்கிலும்பரவமண்டிச்செய்பூஞ்ச
ஞுசனையதாய்ப்பெண்கள்சோபகம்பாடிச்
சுற்றிவந்தார்கள்முத்தாரத்தினீடிக்
கூசிவந்தேமர்தர்சுபமங்களந்தான்
கூறினாராமற்குஜயமங்களந்தான்
யோசனைகளேயென்றிரசருங்கிட்டி
உடனேபணிந்தார்கள்கப்பங்கள்கட்டித்
தேசாசர்க்குவெகுமானஞ்செய்தான்தான்
ஸ்ரீரங்கநாதனைவிபீஷணற்கீந்தான்
தசாதிதேசங்களெல்லாமுனைந்து
தன்னுயிருமன்னுயிருமொன்றாய்நினைந்து
மோசமேதாயிலோர்கடமைதான்வாங்கி
முழுதுமோர்குடையிருந்தாள்மனதோங்கி
ராஜாதிராஜனுய்ச்செங்கோலையேந்தி
ராச்சியாகாரம்நடத்தினதுசாந்தி
தேயுள்ளபூர்ணசந்திரோதயம்போலே
செழிப்பாய்விளங்கினன்றருட்கெழியாலே
பேசியிதுகேட்பவர்களையனைதிச்சையெல்லாம்
பெற்றுவாழ்வார்களென்பதுமுனிவர்சொல்லாம்
பாசவினையகலும்படிக்கருண்மிகுந்தான்
பாலகவியாஞ்சீனிவாசனையுகந்தான்
கேசமுடனெல்லோருமேறிவருங்கப்பல்
நிலையயோத்தியில்வந்துநின்றதடாகப்பல்

மாசில்வெகுராமன்-வாழ்பரந்தாமன்
மலர்முகச்சோமன்-வந்தாகுராமன்

மாட்சிமையபேட்சிக்கக்கடாட்சிசர்வசாட்சியென்று

வந்திக்கவு-சந்திச்சையை
முந்தித்தரு-வன்றம்பரன்
ஏலேலோ-ஏலேலோ தந்தய்யா
ஏலேலோ-ராமசெயம்

இராமாயண ஏலப்பாட்டு
முற்றிற்று.

---

சீதாலட்சுமண பரதசத்துருக்கன் ஸ்ரீராமச்சந்திரசுவாமியேசமோ
மேற்சொல்லிய சென்னையில்வாழ் கோமளபுரம்
இராசகோபாலபிள்ளையவர்கள்-இயற்றியது.
எழுசீர்க் கழிநெடி லாசிரியவிருத்தம்.

பொன்னெயிர்க்கோயில்வேதியர்திலகன்புகழ்பெறுசீனிவாசப்போர்
மன்னியபாலகவியுளகயந்தமர்தர்கள்சிறுவர்களானோர்
பன்னியந்தளவப்பாமனென்சீரைப்பாடுவோனியற்சொலான்முற்றும்
நன்னடைஏலப்பாட்டென்ராமாயணத்தினைகல்கினன்கே.

---